## ABSTRACT

Schemes – State Government Scheme – "Muthalamaicharin Veedugal Marukattumana Thittam" – 2025-26 – Announcement made by the Hon'ble Minister for Finance and Environment and Climate Change during the Budget speech 2025-26 - Reconstruction beyond repairable houses - constructed under the various Government schemes till the year 2000-01 - with a Plinth area of 210 sq.ft. at a unit cost of Rs.2.40 lakh per house - Administrative sanction and Guidelines - Orders - Issued.

---

**Rural Development and Panchayat Raj (SGS.1) Department**

**G.O.(Ms.) No.37**

**Dated: 14.03.2025**
**குரோதி, மாசி 30**
**திருவள்ளுவர் ஆண்டு–2056**

**Read:**

(1) G.O. (Ms) No.69, Rural Development and Panchayat Raj (SGS.1) Department, dated 15.03.2024.
(2) Government Letter No.2664/SGS.1/2024-1, Rural Development and Panchayat Raj Department, dated 15.06.2024.
(3) From the Commissioner of Rural Development and Panchayat Raj Letter No.15519/2024/RHS 2-2, dated 14.02.2025.
(4) Announcement made by the Hon'ble Minister for Finance and Environment and Climate Change during the Budget speech 2025-26 on 14.03.2025.

-----

**ORDER:**

In the Government order first read above, administrative sanction was accorded for carrying out repairs to 2,57,006 Houses at an estimated cost of Rs.1954.20 Crore in two years viz., 2024-25 and 2025-26 and financial sanction is accorded to repair 1,48,634 houses at an estimated outlay of Rs.1041.32 Crore under Repairs to Rural Houses Scheme for the year 2024-25.

2. In the letter second read above, the guidelines and additional guidelines had been issued for the effective implementation of Repairs to Rural Houses Scheme to carry out repairs in the houses constructed under the various Government schemes till the year 2000-01 in the rural areas.

3. In the reference fourth read above, the Hon'ble Minister (Finance and Environment and Climate Change) among others has made the following Announcement during the Budget Speech 2025 in respect of Rural Development and Panchayat Raj Department as follows:-

**"The Government has decided to reconstruct new houses in lieu of dilapidated houses built for marginalized sections of the society in rural areas under various schemes prior to 2001, which are beyond repair now.**

Verified RealEstate™

**Under this scheme, 25,000 new houses will be constructed in the year 2025-26 at an estimated cost of Rs.600 crore".**

4. Accordingly, the Commissioner of Rural Development and Panchayat Raj in the letter third read above has stated that, the Government of Tamil Nadu has introduced the Scheme of Repairs to Rural Houses in the year 2024-25, to carry out repairs in the houses constructed under the various Government schemes till the year 2000-01 in the rural areas. As of now, one lakh houses only were taken up for repair based on field conditions. During the field verification of the houses which require repairs, it is found that, considerable number of houses are in dilapidated and in beyond repairable condition. Continuous requests are being received from the rural beneficiaries to reconstruct those houses.

5. The Commissioner of Rural Development and Panchayat Raj has further stated that, in lieu of those unliveable houses, it has been proposed to introduce a new scheme, "Muthalamaicharin Veedugal Marukattumana Thittam" during the year 2025-26, to reconstruct beyond repairable houses with a Plinth area of 210 sq.ft at a cost of Rs.2.40 lakh per house. Apart from the unit cost, 90 person days shall be provided to each beneficiary under MGNREGS. In the phase-I, it is proposed to reconstruct 25,000 houses at a total outlay of Rs.600 crore.

6. The Commissioner of Rural Development and Panchayat Raj has therefore requested the Government to issue necessary orders as follows:-

i. To approve the draft guidelines for implementation of "Muthalamaicharin Veedugal Marukattumana Thittam" for the year 2025-26.

ii. To allocate an amount of Rs.600 Crore for the purpose of the scheme.

7. The Government have carefully examined the proposal of the Commissioner of Rural Development and Panchayat Raj in detail and has decided to accept the same, and introduce the scheme of "Muthalamaicharin Veedugal Marukattumana Thittam" to reconstruct the beyond repairable houses, having a plinth area of 210 square feet at a cost of Rs.2.40 lakh per house for the year 2025-26 and accord administrative sanction for a sum of Rs.600 crore, which includes a devolution grant of Rs.100 crore and a state fund of Rs.500 crore and approve the guidelines for this scheme.

8. The guidelines for implementing of "Muthalamaicharin Veedugal Marukattumana Thittam" for the year 2025-26 is annexed to the Government Order.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**GAGANDEEP SINGH BEDI**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

To
The Commissioner of Rural Development and Panchayat Raj, Chennai–15.
All District Collectors (except Chennai)
(through the Commissioner of Rural Development and Panchayat Raj, Chennai–15).

All Project Directors, District Rural Development Agency,
(through the Commissioner of Rural Development and Panchayat Raj, Chennai–15).
The Commissioner of Treasuries and Accounts, Chennai-35.
The Principal Accountant General, Chennai -18/35.
The Pay and Accounts Officer (Secretariat), Chennai-9.
The Pay and Accounts Officer (East/North/South), Chennai-8/1/35.
The Pay and Accounts Officer, Madurai.
All District Treasury Officers.
The Resident Audit Officer, Chennai-9.
The National Informatics Centre, Chennai-9.

Copy to
The Hon'ble Chief Minister's Office, Chennai-9.
The Special Personal Assistant to the Hon'ble Minister for Rural Development, Chennai-9.
The Senior Principal Private Secretary to the Chief Secretary to Government, Chennai-9.
The Senior Private Secretary to the Additional Chief Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, Chennai-9.
The Senior Private Secretary to the Principal Secretary to Government, Finance Department, Chennai-9.
The Finance (BG.I/BG.II/Infra-IV) Department, Chennai – 9.
Stock file/ Spare copy.

**//FORWARDED BY ORDER//**

**Section Officer**

Verified RealEstate™

## Annexure

## G.O. (Ms) No.37, Rural Development and Panchayat Raj (SGS.1) Department, dated 14.03.2025

## GUIDELINES FOR MUTHALAMAICHARIN VEEDUGAL MARUKATTUMANA THITTAM

### 1. Introduction:

Government of Tamil Nadu has introduced the Scheme Repairs to Rural Houses in the year 2024-25, to carry out repairs in the houses constructed under the various Government schemes till the year 2000-01 in the rural areas. Accordingly, about one lakh houses were taken up for major and minor repairs based on field conditions.

During the field verification of houses requiring repairs, it was found that a considerable number of houses were in a dilapidated condition and in beyond repairable condition. Hence, the Government of Tamil Nadu have decided to reconstruct these houses based on the requests received from the people.

For this purpose, Government of Tamil Nadu has introduce the "**Muthalamaicharin Veedugal Marukattumana Thittam**" during the year 2025-26.

### 2. Eligibility Criteria

i. The Repairs to Rural Houses Survey conducted by the Rural Development and Panchayat Raj Department to ascertain repairs to the houses constructed under various Government schemes till the year 2000-01 in rural areas shall broadly be the basis for this Scheme.

ii. Such houses which have tiled and sloped RCC roofs and were constructed under various Government schemes such as IAY, THADCO, schemes for the Scheduled Tribes, etc., till the year 2000-01 and which are presently beyond repairable condition are eligible under this scheme. An exemption to this is that the houses constructed for 2004-Tsunami victims by the Non-Governmental Organisations under the then Government-NGO partnership scheme, where NGOs were permitted to, construct houses for the Tsunami victims by the district administration, which have become dilapitable and beyond repair and the beneficiary is otherwise eligible, will also be considered under this scheme as a special case.

iii. The old house to be reconstructed should have been allotted under a Government scheme in the name of the beneficiary, or the beneficiary must be the legal heir of the person in whose name the house was allotted, in case where such an allottee is not alive.

iv. The beneficiary selected should not own any house constructed either on his own or benefitted under any of the Government housing schemes in his/her name other than the house taken up under this Scheme.

v. Houses sold out, rented, occupied by non-legal heirs should not be taken up under this scheme.

Verified RealEstate™

vi. Houses, if any, owned by retired or serving Government servants (except part-time, contract appointment, daily wage appointment) including employees of Local Bodies, PSUs, Government Aided Institutions, Boards and other quasi-government undertakings or their spouses should not be taken under this Scheme for reconstruction.

**3. Mode of Selection of Beneficiaries:**

The eligible beneficiaries list provided in the "RRH Survey" in the tnrd.gov.in web portal shall be downloaded by the Block Development Officer (Block Panchayat) of the respective block for verification of eligibility.

The Block Development Officer (Block Panchayat) shall form a Committee at Village Panchayat level with the following members, to assess the eligibility of the beneficiaries under this Scheme.

a) Village Panchayat President / Special Officer.
b) Assistant Engineer / Block Engineer of the Village Panchayat concerned.
c) Zonal Deputy Block Development Officer of the Village Panchayat concerned.
d) Overseer of the Village Panchayat concerned.
e) Village Panchayat Ward member concerned/ wherever available.
f) Village Panchayat Secretary concerned.

The Committee shall jointly inspect all the houses to assess the eligibility of the beneficiary under the Scheme and recommend with a signature. The final list of beneficiaries shall be placed in the Grama Sabha for approval. In case there is any representation regarding left-out cases, that should be referred to the Committee for checking/verifying to include such beneficiary in the list if such representation is otherwise genuine.

**4. Allocation of Houses:**

At the State Level, the Commissioner of Rural Development and Panchayat Raj shall allocate the District wise/Block-wise/ Village Panchayat-wise target, based on the proposals to be received from the District Collectors.

**5. Execution of works:**

a) Administrative sanction shall be accorded by the District Collector/Chairman, District Rural Development Agency.
b) The execution of the scheme shall be entrusted to the Block Development Officer (Block Panchayat).
c) The Overseer and the Assistant Engineer / Block Engineer concerned shall provide the necessary technical support for the construction of the houses.
d) The Overseer shall inspect and prepare the valuation certificate and it should be counter-signed by the Assistant Engineer/ Block Engineer for making payment.

e) Payment will be made in four instalments. First instalment after attaining basement stage, second instalment at lintel laid stage, third instalment at roof laid stage, and fourth instalment after completion.

**6. Unit Cost, Plinth Area and Other Technical Aspects**

The houses are fully damaged and in beyond repairable condition as per the list available in the web portal can be constructed newly at a cost of Rs.2.40 lakh with 210 sqft plinth area. Since the previously constructed houses (IAY, THADCO) had an area for 210 sqft and the site available for the beneficiary is limited to this area, the plinth area for construction is permitted as 210 sqft.

- Any extra cost arising due to the preference of the beneficiaries in reconstruction in addition to the unit cost will be borne by the beneficiaries themselves.
- The walls of the houses should be constructed by using country bricks/ Fly ash bricks/ solid blocks/ interlocking blocks/ Autoclaved Aerated Concrete (AAC) blocks with framed structure using cement mortar.
- Under any circumstances mud mortar should not be used. Construction of mud walls is completely banned.
- The Village Panchayat shall provide necessary assistance to the beneficiaries in the construction of the house.
- Cost effective technologies and fast-track construction will also be permitted under the Scheme.
- Roof can be laid as per the preference of the beneficiary. It can be either have Poly Urethane Foam (PUF) panel or Reinforced Cement Concrete (RCC) structure.
- The houses should be constructed as per the type design prescribed.
- Toilets to be constructed simultaneously
- The houses are encouraged to be constructed by the beneficiaries themselves.

**7. Fund allocation for Administrative expenses**

1% of the total allocation will be allotted for administrative expenses additionally.

**8. General:**

a) The payment shall be credited directly to the bank account of the beneficiaries.

b) Geo-tagging of damaged houses prior to commencement of reconstruction has to be compulsorily done. At the time of first and successive instalments, stage of the houses have to be geotagged and uploaded in tnrd website.

c) The Overseer/Assistant Engineer should check and super check each of the house. The Assistant Executive Engineer (RD) should monitor and ensure the quality of construction of the houses in his/her Sub-Divisions as per standards.

Verified RealEstate

Zonal Deputy Block Development Officer and Block Development Officer (BP) have to inspect and ensure smooth implementation of the scheme.

d) Name of the Scheme, beneficiary name and year of construction shall be painted prominently on each completed house.

e) The District Collector, Additional Collector (Dev.) / Project Director and Executive Engineers (RD) and Assistant Executive Engineers (Sub Division) and other District & Block level officials should frequently inspect the progress of the houses and ensure quality and timely completion.

**9. Fund Details**

Under this special scheme, houses constructed will be provided with financial assistance of Rs.2,40,000/-. The work should be executed by the beneficiaries, and the excess amount, if any required, shall be borne by the beneficiaries themselves.

**10. Convergence:**

Apart from the unit cost, 90 person days shall be provided to each beneficiary for reconstruction of houses under MGNREGS.

**11. Supply of Materials:**

The cement and steel required for the construction of the houses will be calculated on a case-to-case basis and supplied to the beneficiaries by the Department before the commencement of works. The cost of the cement and steel supplied shall be deducted from the payment due to the beneficiaries.

**12. Planting of Tree Saplings:**

At least 2 tree saplings with 6 feet height have to be planted in front of the house or wherever space is available with a tree guard to safeguard the sapling from grazing animals. Final payment should be done only after tree plantation.

**13. Documentation:**

Photographs of the dilapidated house are to be taken from all 4 sides and at least 2 photographs from inside are to be taken prior to the issuance of the work order. Photographs of the house during the execution of work and after completion shall also be taken and shall be documented by the Block Development Officer (BP) before making payment.

**14. Release of funds in DBT model through State Nodal Account**

The Commissioner of Rural Development and Panchayat Raj will draw the fund from the treasury and credit the same in the Single Nodal Account (SNA) to be

Verified RealEstate™

opened for this scheme. Instalments to the beneficiaries will be released to their bank accounts from the SNA.

**15. Amendment to guidelines**

The Additional Chief Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, in consultation with the Commissioner of Rural Development and Panchayat Raj, is authorized to amend these guidelines based on the exigencies that may arise from time to time.

**GAGANDEEP SINGH BEDI**
**ADDITIONAL CHIEF SECRETARTY TO GOVERNMENT**

**// TRUE COPY //**

**SECTION OFFICER**

Verified RealEstate TM

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.37, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.1) துறை, நாள் 14.03.2025.**

**முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டம் – வழிகாட்டு நெறிமுறைகள்**

**1. முன்னுரை**

கிராமப்புறங்களில் 2000–01 ஆம் ஆண்டு வரை பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுதுபார்ப்பதற்காக 2024–25 ஆம் ஆண்டில் கிராமப்புற வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியது. அதன்படி, சிறு மற்றும் பெரும் பழுதுநீக்கப் பணிகளை மேற்கொள்ள அரசால் உத்திரவிடப்பட்டது. ஆனால் கள நிலைமைகளின் அடிப்படையில் ஒரு லட்சம் வீடுகள் பழுதுபார்ப்பு பணிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

பழுதுபார்க்க வேண்டிய வீடுகளைக் கள ஆய்வு செய்தபோது; கணிசமான எண்ணிக்கையிலான வீடுகள் பழுதடைந்த நிலையிலும், சரிசெய்ய முடியாத நிலையிலும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பாக மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த வீடுகளை மீண்டும் கட்டிட தமிழக அரசு முடிவு செய்தது.

இந்த நோக்கத்திற்காக, 2025–26 ஆம் ஆண்டில் **"முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டம்"** என்ற திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்துகிறது.

**2. தகுதி வரம்புகள்**

i. கிராமப்புறங்களில் 2000–2001ஆம் ஆண்டு வரை பல்வேறு அரசு திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுதுநீக்கம் செய்தல் தொடர்பாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு இத்திட்டத்திற்கு அடிப்படையாக இருக்கும்.

ii. 2000–01 ஆம் ஆண்டு வரை IAY, THADCO, பழங்குடியினருக்கான திட்டங்கள் போன்ற பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் கட்டப்பட்டு, தற்போது பழுதுபார்க்க முடியாத நிலையில் உள்ள ஓடுகள் மற்றும் சாய்தள கான்கிரிட் கூரை கொண்ட வீடுகள் இந்தத் திட்டத்தின்கீழ் தகுதியுடையவை.

iii. மறுகட்டுமானம் செய்யப்பட வேண்டிய வீடு, பயனாளியின் பெயரில் அரசுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும் அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்ட பயனாளி இறந்திருப்பின், பயனாளியின் சட்டப்பூர்வ வாரிசாக உள்ள குடும்ப உறுப்பினர் அவ்வீட்டில் குடியிருக்க வேண்டும். அத்தகைய வீடு மட்டுமே

மறுகட்டுமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இருப்பினும், இவற்றிற்கு விலக்களிக்கும் விதமாக 2004ஆம் ஆண்டு சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அப்போதைய அரசு – அரசு சாரா நிறுவனங்களின் கூட்டுப் பங்களிப்பு திட்டத்தின்கீழ், அரசு சாரா நிறுவனங்களின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்ட நிருவாக ஒப்புதலுடன் வீடுகள் கட்டப்பட்டு, தற்போது சேதமடைந்து பழுதுபார்க்க இயலாத நிலையில் உள்ள வீடுகளின் பயனாளிகளும், பிற வகையில் தகுதி பெற்றிருந்தால் சிறப்பினமாக இத்திட்டத்தின்கீழ் கருதப்படுவர்.

iv. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி, இந்தத் திட்டத்தின்கீழ் எடுக்கப்படும் வீட்டைத் தவிர, தனது பெயரில் சொந்தமாக கட்டப்பட்ட அல்லது பல்வேறு அரசு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட வீட்டினை சொந்தமாகக் கொண்டிருக்கக்கூடாது.

v. விற்கப்பட்ட வீடுகள், வாடகைக்கு விடப்பட்ட வீடுகள் மற்றும் சட்டப்பூர்வமற்ற வாரிசுகள் வசிக்கும் வீடுகள் இத்திட்டத்தின்கீழ் மறுகட்டுமானத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது.

vi. ஓய்வுபெற்ற அல்லது பணிபுரியும் அரசு ஊழியர்களுக்குச் சொந்தமான வீடுகள் (பகுதிநேர, ஒப்பந்த நியமனம், தினக்கூலி நியமனம் தவிர) உள்ளாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்கள், அரசு உதவி பெறும் நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்களில் பணியிலிருப்போர் அல்லது அவர்களது வாழ்க்கைத் துணை ஆகியோரின் வீடுகள் இந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படக்கூடாது.

**3. பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை:**

தகுதியான பயனாளிகளின் பட்டியலை tnrd.gov.in இணையதளத்தில் உள்ள "RRH Survey" என்ற தளத்தில் உள்ள பயனாளிகளின் விவரங்களை வட்டார அளவில் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) பதிவிறக்கம் செய்து பயனாளிகளின் தகுதி குறித்து கள ஆய்வு செய்ய வேண்டும்.

இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகளின் தகுதியை மதிப்பிடுவதற்காக, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), கிராம ஊராட்சி அளவில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

i. கிராம ஊராட்சி மன்ற தலைவர்/தனி அலுவலர்.

ii. சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் உதவிப் பொறியாளர் / ஒன்றியப் பொறியாளர்.

iii. சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்.

iv. சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் பணிமேற்பார்வையாளர்.

v. சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் வார்டு உறுப்பினர்கள் (வார்டு உறுப்பினர்கள் பதவியில் உள்ள கிராம ஊராட்சிகளில்)

vi. சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி செயலர்.

இந்தக் குழு அனைத்து வீடுகளையும் கூட்டாக ஆய்வு செய்து, இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியான பயனாளியை குழு உறுப்பினர்கள் கையொப்பத்துடன் பரிந்துரைக்கும். பயனாளிகளின் இறுதிப் பட்டியல் கிராம சபையில் ஒப்புதலுக்காக வைக்கப்படும். இதில் விடுபட்ட வீடுகள் குறித்து ஏதேனும் கோரிக்கை பெறப்படின் அதனை இக்குழுவிற்கு அனுப்பி அதன் உண்மைத்தன்மையை கண்டறிந்து பயனாளிகளின் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

**4. வீடுகள் ஒதுக்கீடு செய்தல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும் கருத்துருக்களின் அடிப்படையில், மாவட்டம் /வட்டாரம்/கிராம ஊராட்சி வாரியான இலக்கு நிர்ணயிக்கப்படும்.

**5. பணிகளை செயல்படுத்துதல்:**

i. மாவட்ட ஆட்சியர்/ பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும்.

ii. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) இத்திட்டத்தை செயல்படுத்தும் அலுவலர் ஆவார்.

iii. பணி மேற்பார்வையாளர் உதவிப் பொறியாளர்/வட்டாரப் பொறியாளர் ஆகியோர் வீடுகள் கட்டுவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குவார்கள்.

iv. பட்டியல் தொகை வழங்குவதற்காக வீட்டு கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்து பணிமேற்பார்வையாளர் மதிப்பீட்டுச் சான்றிதழ் தயாரிப்பார். அதனை உதவிப் பொறியாளர்/வட்டாரப் பொறியாளர் மேலொப்பம் செய்ய வேண்டும்.

v. பட்டியல் தொகை நான்கு தவணைகளில் வழங்கப்படும். அடித்தள நிலையை அடைந்த பிறகு முதல் தவணை, லிண்டல் கான்கிரீட் அமைக்கும் கட்டத்தில் இரண்டாவது தவணை, மேற்கூரை கான்கிரீட் அமைக்கும் கட்டத்தில் மூன்றாவது தவணை மற்றும் பணி முடிந்த பிறகு நான்காவது தவணை வழங்கப்படும்.

**6. அலகுத்தொகை, வீட்டின் பரப்பளவு மற்றும் பிற தொழில்நுட்ப அம்சங்கள்:**

முழுமையாக சேதமடைந்து, பழுதுபார்க்க முடியாத நிலையில் உள்ள வீடுகளை, இணையதளத்தில் உள்ள பட்டியலின்படி, ரூ.2.40 இலட்சம் செலவில், 210 சதுர அடி பரப்பளவில் புதிதாகக் கட்டலாம். முன்னர் கட்டப்பட்ட வீடுகள் (**IAY, THADCO**) 210 சதுர அடி பரப்பளவைக் கொண்டிருந்ததாலும், பயனாளிகளுக்கு சொந்தமான இடம் இப்பரப்பளவே இருக்கும் என்பதாலும், இத்திட்டத்தின் கீழ்

Verified RealEstate

கட்டப்படும் வீடுகளுக்கான பரப்பளவு 210 சதுர அடிக்கு உட்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

- பயனாளிகளின் விருப்பத்திற்கேற்ப மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டால் அதன் காரணமாக அலகுத்தொகைக்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவினத்தை பயனாளிகளே ஏற்க வேண்டும்.
- வீடுகளின் சுவர்களை செங்கற்கள்/ நிலக்கரி சாம்பல் கலந்த கற்கள்/ சிமெண்ட் கான்கிரீட் கற்கள் / இன்டர்லாக்கிங் கற்கள் மற்றும் ஆட்டோகிளேவ்டு ஏரேட்டட் கான்கிரீட் (AAC) கற்கள் பயன்படுத்தி சிமெண்ட் சாந்தினால் சட்டக அமைப்புடன் (Framed Structure) கட்டப்பட வேண்டும்.
- எந்த சூழ்நிலையிலும் மண்சாந்து பயன்படுத்தக்கூடாது. மண் சுவர்கள் கட்டுவது முற்றிலுமாக தடைசெய்யப்பட்டுள்ளது.
- பயனாளிகள் வீடு கட்டுவதற்கு தேவையான உதவிகளை கிராம ஊராட்சிகள் வழங்கவேண்டும்.
- இத்திட்டத்தின்கீழ் செலவு குறைந்த தொழில்நுட்பங்கள் மற்றும் விரைவான கட்டுமான முறை ஆகியவை அனுமதிக்கப்படும்.
- இத்திட்டத்தின்கீழ் பயனாளியின் விருப்பப்படி கூரை அமைக்கலாம். இது பாலி யூரித்தேன் நுரை (**PUF**) பேனல் அல்லது வலுவூட்டப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் (**RCC**) கட்டமைப்பைக் கொண்டிருக்கலாம்.
- இத்திட்டத்தின்கீழ் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பின்படி வீடுகள் கட்டப்பட வேண்டும்.
- வீடுகள் கட்டுமானப் பணிகள் நடைபெறும்போதே கழிவறைகள் கட்டும் பணியும் உடன் மேற்கொள்ளப்படவேண்டும்.
- வீடுகளின் கட்டுமானப் பணியினை பயனாளிகள் தாங்களே மேற்கொள்வதை ஊக்கப்படுத்த வேண்டும்.

**7. நிர்வாக செலவினம்**

மொத்த ஒதுக்கீட்டில் 1% நிர்வாகச் செலவுகளுக்காக கூடுதலாக ஒதுக்கப்படும்.

**8. பொது:**

அ) பட்டியல் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

ஆ) மறுகட்டுமானப் பணி தொடங்குவதற்கு முன்பே சேதமடைந்த வீடுகளின் தற்போதைய நிலை குறித்த புவிசார் குறியிடுதல் கட்டாயமாக செய்யப்பட வேண்டும். முதல் மற்றும் அடுத்தடுத்த தவணைகள் வழங்கும்போதும், வீடுகளின் கட்டுமான நிலையினை புவிசார் குறியீடு செய்து tnrd இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

இ) பணிமேற்பார்வையாளர்/உதவிப் பொறியாளர் ஒவ்வொரு வீட்டையும் அளவு/மேலளவு செய்ய வேண்டும். உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) தனது உபகோட்டத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் நடைபெறும் வீடு மறுகட்டுமானப் பணிகளை ஆய்வு செய்து அவற்றின் தரத்தினை உறுதி செய்ய வேண்டும். மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்

Verified RealEstate

(வ.ஊ) ஆகியோர் இத்திட்டம் சீராக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

ஈ) பணி முடிக்கப்பட்ட வீடுகளில், திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர் மற்றும் கட்டுமான ஆண்டு ஆகியவை முடிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிலும் தெளிவாக வண்ணப்பூச்சு கொண்டு எழுதப்பட வேண்டும்.

உ) மாவட்ட ஆட்சியர், திட்ட இயக்குநர் மற்றும் செயற்பொறியாளர்கள் (ஊ.வ) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் (உபகோட்டம்) மற்றும் பிற மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் வீடுகளின் முன்னேற்றத்தை அடிக்கடி ஆய்வு செய்து வீடுகள் தரத்துடன் சரியான நேரத்தில் முடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**9. நிதி விவரங்கள்:**

இந்த சிறப்புத் திட்டத்தின் கீழ், கட்டப்படும் வீடுகளுக்கு ரூ.2,40,000/- நிதியுதவி வழங்கப்படும். பணிகளை பயனாளிகளே மேற்கொள்ள வேண்டும். மேலும், அதிகப்படியான தொகை தேவைப்படின் அத்தொகையை பயனாளிகளே ஏற்க வேண்டும்.

**10. ஒருங்கிணைப்பு:**

வீடுகளை மறுகட்டமைக்க ஒவ்வொரு பயனாளிக்கும் அலகுத்தொகை தவிர 90 மனித சக்தி நாட்களுக்கான கூலித்தொகை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

**11. கட்டுமானப் பொருட்கள் வழங்குதல்**

வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள், ஒவ்வொரு பயனாளிக்கும் தனித்தனியாகக் கணக்கிடப்பட்டு, பணிகள் தொடங்குவதற்கு முன்பு துறை மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்படும். வழங்கப்பட்ட சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகளுக்கான கிரயத்தொகை பயனாளிகளுக்கு வழங்கப்படும் தவணைத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

**12. மரக்கன்றுகள் நடுதல்**

வீட்டின் முன்புறத்திலோ அல்லது வீட்டை சுற்றியுள்ள இடவசதிக்கேற்ப குறைந்தது 6 அடி உயரமுள்ள 2 மரக்கன்றுகளை நட வேண்டும். மேற்படி மரக்கன்றுகளை விலங்குகளிடமிருந்து பாதுகாத்திட வேலி (Tree Guard) அமைக்கப்பட வேண்டும். இதன் பின்னரே இறுதித் தவணைத்தொகை வழங்க வேண்டும்.

**13. ஆவணப்படுத்துதல்**

பணி ஆணை வழங்குவதற்கு முன்பு பழுதடைந்த வீட்டின் புகைப்படங்களை நான்கு பக்கங்களிலிருந்தும் எடுக்க வேண்டும். மேலும், வீட்டின் உட்பகுதியிலிருந்து இரண்டு புகைப்படங்களையாவது எடுக்க வேண்டும். கட்டுமானப் பணி நடைபெறும் பொழுதும், முடிந்த பின்னரும் வீட்டின் நிலை

VerifiedRealEstate™

குறித்த புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, தொகை அளிப்பதற்கு முன்பு வட்டார வளர்ச்சி அலுவலரால் (வ.ஊ) ஆவணப்படுத்த வேண்டும்.

**14. ஒற்றைச் சாளர வங்கி கணக்கு (SNA) மூலம் நேரடி பணப்பரிமாற்றம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் கருவூலத்திலிருந்து இத்திட்டத்திற்கான நிதியைப் பெற்று, இத்திட்டத்திற்காக ஆரம்பிக்க உள்ள ஒற்றைச் சாளர வங்கிக் கணக்கில் (SNA) வரவு வைப்பார். பயனாளிகளுக்கான தவணைகள் ஒற்றைச் சாளர வங்கிக் கணக்கு (SNA) மூலமாக அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு விடுவிக்கப்படும்.

**15. வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம்**

அவ்வப்போது ஏற்படக்கூடிய தேவைகளைப் பொறுத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருடன் கலந்தாலோசித்து, இந்த வழிகாட்டுதல்களைத் திருத்தியமைக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

பா.கவிதா

**பிரிவு அலுவலர்**

Verified RealEstate™